## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - சமத்துவ மக்கள் கழகம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் நாராயணன் தலைமையில் பொருளாளர் எம்.கண்ணன், இளைஞர் செயலாளர் கார்த்திக் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மூவேந்தர் முன்னேற்றக் கழகம் பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் தலைமையில் அமைப்புச் செயலாளர் ஜி.எம்.ஆர்.வைபவ் வாண்டையார், ஆட்சிமன்றச் செயலாளர் நம்பிவயல் ரவீந்திரன், மாநிலத் துணைத் தலைவர் டி.விப்ர நாராயணன் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

## தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - மக்கள் விடுதலைக் கட்சி பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் (2.3.2026) அண்ணா அறிவாலயத்தில் மக்கள் விடுதலைக் கட்சி நிறுவனத் தலைவர் கே.முருகவேல் ராஜன் தலைமையில், பொதுச் செயலாளர் ஏ.ராஜி, செயல் தலைவர் என்.அபி சுரேஷ், அமைப்புச் செயலாளர் சி.சரவணன், துணைப் பொதுச் செயலாளர் ஆர்.செல்வகுமார் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.



மார்ச் 1 கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர தி.மு.க. சார்பில் நகர செயலாளர் என்.பி. வேல்முருகன் தலைமையில் தி.மு.க.வினர் இனிப்பு வழங்கி கொண்டாடினர். இந்நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் அலெக்சாண்டர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் நாகை அழகர் மேலவீதியில் தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது.தேர்தல் பணிமனையை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ்பொய்யாமொழி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தலைவார் என்.கௌதமன், நாகை நகர்மன்ற தலைவருமான, நாகை நகர செயலாளருமான இரா.மாரிமுத்து, மாவட்ட கழக பொறியாளர் மு.லோகநாதன், மாவட்ட சார்பஅணி அமைப்பாளர்கள் ஆர்.ஏ.டி.அண்ணாதுரை, எஸ். பால்ராஜ் மற்றும் நகர கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தை கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். இதில் கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், (BLA 2) பாக நிலை முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கரூர் மாநகராட்சி திருவள்ளுவர் மைதானம் மேற்கு பகுதியில், கரூர் மாவட்ட மைய நூலகத்திற்கு, ரூபாய் 6.90 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். இந்நிகழ்வில், கரூர் மாவட்ட ஆட்சியர் கு. ரவிகுமார், மாவட்ட நூலக அலுவலர் சிவக்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். அனைத்து வசதிகளுடன், 17100 சதுரடியில் மூன்று தளங்கள் உள்ளன. அனைத்து தளங்களிலும், பெண்கள், ஆண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்தனியே கழிப்பறை வசதிகள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் லிப்ட் வசதி உள்ளது.

### சட்டமன்றத் தேர்தல் :

# 11 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!



சென்னை, மார்ச் 4 -

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

11 வது நாளாக நேற்று முன்தினம் (2.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

11வது நாளான நேற்று முன்தினம் (02.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன். கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ், கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்த வரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப் படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 6ஆம் தேதி வரை நடை பெறுகிறது.